## பாலியல் குற்றம் என்றால் என்ன?

சிங்கப்பூரில் பாலியல் குற்றங்களில் பின்வருபவை அடங்கும்:

- கற்பழிப்பு
- ஊடுருவல்வழி பாலியல் தாக்குதல்
- இளவயதினருடன் பாலியல் ஊடுருவல்
- பாலியல் நடவடிக்கைகளுக்காக இளவயதினரை தயார்படுத்துதல்
- சிறுவர் அல்லது இளையரை பாலியல் ரீதியாக துன்புறுத்துதல் மற்றும் பயன்படுத்துதல்
- மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவருடன் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- மானபங்கம்

**பாலியல் குற்றம் யாருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம். பாலியல் குற்றம் தொடர்பான அனைத்து புகார்களையும் காவல்துறை தீவிரமாகக் கருதுகின்றது.**

நீங்கள் பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் அல்லது பாதிக்கப்பட்ட ஒருவரைப் பற்றி அறிந்திருந்தால், அதனை காவல்துறையிடம் தெரிவிக்கவும். சம்பவம் எப்போது நிகழ்ந்திருந்தாலும் நீங்கள் புகாரளிக்கலாம். கூடிய விரைவில் அவ்வாறு செய்வது ஆதாரங்களைப் பாதுகாக்க உதவும். நீங்கள் வழங்கும் தகவல்கள் ஒரு குற்றவாளியை நீதியின் முன் கொண்டு வரவும், மற்ற நபர்களுக்கு மேலும் தீங்கு ஏற்படாமல் தடுக்கவும் உதவும்.

## ஆதரவுச் சேவைகள்

நீங்கள் பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் அல்லது பாதிக்கப்பட்ட ஒருவரைப் பற்றி அறிந்திருந்தால், பின்வரும் சேவைகள் உங்களுக்கு ஆதரவையும் ஆலோசனையையும் வழங்கும்:

### கேர் கார்னர் ஸ்டார்ட் திட்டம்

பாதிக்கப்பட்டவர் எளிதில் அணுகக்கூடிய உதவியை வழங்குகிறது
அழைக்கவும்: 6476-1482 [ திங்கள் - வெள்ளி: 10am – 1pm, 2pm – 5pm; பொது விடுமுறை நாட்கள் தவிர]
மின்னஞ்சல்: projectstart@carecorner.org.sg
இணையத்தளம்: https://www.carecorner.org.sg/services/sexual-assault-recovery/

### தேசிய வன்முறை எதிர்ப்பு, பாலியல் துன்புறுத்தல் உதவி எண் (NAVH):

பாலியல் வன்முறை, பாலியல் துன்புறுத்தல் உட்பட வன்முறை, துன்புறுத்தல் அல்லது புறக்கணிப்பு தொடர்பாக புகாரளித்து உதவி நாடுதல்
உதவி எண்: 1800-777-0000 (24 மணி நேரம்)
புகார் அளிப்பதற்கான இணையப் படிவம்: https://go.gov.sg/navh

### பேவ்

குடும்ப வன்முறை, சிறுவர் பாதுகாப்பு, பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த சேவை தொலைபேசி:
6555-0390 (திங்கள் - வெள்ளி: 9am – 1pm,
2pm – 6pm; பொது விடுமுறை நாட்கள் தவிர)
மின்னஞ்சல்: intake@pave.org.sg

### சிங்கப்பூர் அபய ஆலோசனைச் சங்கம் (SOS)

நெருக்கடியில் இருப்பவர்களுக்கும், தற்கொலையைப் பற்றி சிந்திப்பவர்களுக்கும் அல்லது தற்கொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உணர்வுரீதியான ஆதரவை வழங்குகிறது
அவசரத் தொலைபேசி எண்: 1767 (24 மணி நேரம்)
வாட்ஸ்ஆப் எண்: 9151 1767 (24 மணி நேரம்)
மின்னஞ்சல்: pat@sos.org.sg

### SHECARES@SCWO

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது இணையப் பாதிப்பிலிருந்து மீண்டவர்களுக்கான "ஒன்-ஸ்டாப்" ஆதரவு நிலையம்
உதவி எண்: 8001-01-4616 (திங்கள் – வெள்ளி, 9am - 9pm)
வாட்ஸ்ஆப் எண்: 6571 4400(திங்கள் – வெள்ளி, 9am - 9pm)
மின்னஞ்சல்: shecares@scwo.org.sg

### டிரான்ஸ் சேஃப் நிலையம்


பாதுகாப்பான உறவுகளை நோக்கி தனிநபர்கள், குடும்பங்கள், சமூகம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும் பாதுகாப்பு நிபுணத்துவ நிலையம்
தொலைபேசி: 6449-9088 (திங்கள்-வெள்ளி: 9am – 5pm; பொது விடுமுறை நாட்கள் தவிர)
மின்னஞ்சல்: transsafe@trans.org.sg

### சாட்சி ஆதரவுத் திட்டம்

குற்றவியல் வழக்குகளில் குற்றம் புரிபவர் எனக் கூறப்படுபவருக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டியிருக்கும்போது எளிதில் பாதிக்கப்படும் சாட்சிகளுக்கு ஆதரவு வழங்குகிறது
உதவி எண்: 1800-587-8423 (திங்கள்-வியாழன்: 8:30am – 6pm; வெள்ளி: 8.30am – 5.30pm)
மின்னஞ்சல்: sc_centre_for_specialist_svcs@judiciary.gov.sg
அரசு தரப்பு வழக்கறிஞர்கள் பரிந்துரை செய்வார்கள்.

**காவல்துறையின் உடனடி உதவி தேவைப்பட்டால் 999 என்ற எண்ணை அழையுங்கள் அல்லது அருகிலுள்ள அக்கம்பக்கக் காவல் நிலையத்திற்குச் செல்லுங்கள். எந்த நேரத்திலும் உங்களுக்கு உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம்.**

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY



# பாலியல் குற்றச் சம்பவங்களைப் புகார் செய்தல்

## புலனாய்வு மற்றும் நீதிமன்ற செயல்முறைகள்

## பாலியல் குற்றங்களை காவல்துறை எவ்வாறு விசாரிக்கிறது?

### விசாரணையின்போது

காவல்துறையின் விசாரணை நடைமுறைகளில் பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்ட அணுகுமுறை பின்பற்றப்படுகிறது, இதில் i) புகார் பெறுதல், ii) நேர்காணல் நடத்துதல், வாக்குமூலம் பதிவு செய்தல் iii) ஆதாரங்களைத் திரட்டுதல், iv) பொருத்தமான விளைவு குறித்து மறுஆய்வு செய்ய அரசாங்கத் தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகத்திற்கு வழக்கு அனுப்பப்படுதல் ஆகியவை அடங்கும். பொதுவாக, மிகவும் சிக்கலான வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கு அதிக நேரம் எடுக்கும். சில சந்தர்ப்பங்களில், விசாரணையும் நீதிமன்ற செயல்முறைகளும் நீட்டிக்கப்படலாம். இருப்பினும், செயல்முறை முழுவதும் பாதிக்கப்பட்டவரை ஆதரவளிக்க நடவடிக்கைகள் உள்ளன.

**1**

அக்கம்பக்கக் காவல் நிலையம் ஒன்றில் புகார் அளிக்கப்பட்டால், அதிகாரி ஒருவர் தனியறையில் பாதிக்கப்பட்டவரை சுருக்கமாக நேர்காணல் செய்வதுடன் புகார் பதிவு செய்யும் நடைமுறையிலும் உதவுவார்.




**2**

பாலியல் குற்றச் சம்பவங்களைக் கையாள சிறப்புப் பயிற்சி பெற்ற விசாரணை அதிகாரி (IO) ஒருவர் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வார்.



**3**

பாதிக்கப்பட்டவர் எந்த நேரத்திலும் ஓய்வு கேட்கலாம். உணர்வுரீதியான ஆதரவு தேவைப்பட்டால், பாதிக்கப்பட்டவரை பராமரிக்கும் அதிகாரிகளின் சேவைகளையும் IO பாதிக்கப்பட்டவருக்கு வழங்குவார்.



**4**

தடயவியல் மருத்துவப் பரிசோதனை தேவைப்பட்டால், பாதிக்கப்பட்டவர் One-SAFE நிலையத்திற்கோ அல்லது மருத்துவமனைக்கோ அழைத்துச் செல்லப்படலாம்.



**5**

புலன் விசாரணை முழுவதும் IO உங்களுக்கு அவ்வப்போது தகவல் அளிப்பார்



### நீதிமன்ற விசாரணையின்போது

குற்றம் புரிந்தவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டால், பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் சாட்சியளிக்க வேண்டியிருக்கலாம். நீதிமன்ற விசாரணையின்போது பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவு வழங்க நடவடிக்கைகள் உள்ளன.

- பாதிக்கப்பட்டவரின் அடையாளம் பாதுகாக்கப்படும்.
- பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட விசாரணையில், நீதிமன்ற அறையில் ஒரு திரையின் பின்னால் அல்லது நீதிமன்றத்திற்கு வெளியே ஒரு அறையில் வீடியோ இணைப்பு மூலம் சாட்சி அளிக்க நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படலாம், இதனால் பாதிக்கப்பட்டவர் குற்றம் புரிந்தவரை பார்க்க வேண்டியதில்லை.
- நீதிமன்றம் அனுமதித்தாலொழிய குற்றச்சாட்டுக்குத் தொடர்பில்லாத பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்க முடியாது.


பாலியல் குற்றச் சம்பவங்களைப் புகாரளிப்பது குறித்த கூடுதல் தகவல்களுக்கு நீங்கள் https://go.gov.sg/spfvictimsupport இல் காணொளியைப் பார்க்கலாம்.

## தடயவியல் மருத்துவப் பரிசோதனை

தடயவியல் மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ள மருத்துவமனைக்கு அல்லது காவல்துறை கெண்டோன்மண்ட் வளாகத்தில் அமைந்துள்ள 'ஒன் ஸ்டாப்' துன்புறுத்தல் தடயவியல் பரிசோதனை (OneSAFE) நிலையத்திற்கு பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அழைத்துச் செல்லப்படலாம்.

- மருத்துவர், தாதி ஆகியோர் காயங்கள் உள்ளதா என பரிசோதித்து, ஏதேனும் இருந்தால் அவற்றை ஆவணப்படுத்தவும், பரிசோதனைக்கு உடலில் இருந்து மாதிரிகளை எடுக்கவும், ஆடை, முடி மாதிரிகள் போன்ற பிற ஆதாரங்களைச் சேகரிக்கவும் மருத்துவப் பரிசோதனை நடத்துவர்.
- ஆதாரங்களைப் பாதுகாப்பதற்காக, கூடிய விரைவில் செய்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- பரிசோதனைக்கு முன் பாதிக்கப்பட்டவரிடம் நடைமுறைகள் விளக்கப்படும். நடைமுறைகள் குறித்து பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் மருத்துவர், தாதி, IO ஆகியோரிடம் கேட்கலாம்.

ஆதாரங்கள் சேகரிக்கப்படுவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் கூடிய விரைவில் காவல்துறையிடம் புகார் செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் ஆடைகளை மாற்றியிருந்தால், துவைக்காத துணிகளை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு வரலாம்.



OneSAFE நிலையத்தில் மருத்துவப் பரிசோதனை அறை